## இணைந்த சேவையின் அலுவலக பணியாளர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்களை கோருதல்

1.0 மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சில் நிலவுகின்ற அலுவலக பணியாளர் சேவையில் தரம் **III** இன் பதவிகளில் உள்ள வெற்றிடங்களின் பொருட்டு அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2.0 கட்டமைப்பு முறையிலான பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைவாக, திறமையின் அடிப்படையில் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகளை, நிலவுகின்ற வெற்றிடங்களின் பொருட்டு நியமனம் செய்யப்படும்.

3.0 மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சு மற்றும் அதன்கீழ் இயங்கும் நிறுவனங்களில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை 8.0 அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. நியமனம் செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்பாதுவிடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரமுள்ளது.

4.0 சம்பளம் :- 03/2016 ஆம் இலக்க மற்றும் 2016.02.25ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை பிரகாரம், PL 01 சம்பளக் குறியீட்டின்படி அலுவலக பணியாளர் சேவையில் III, II மற்றும் I ஆம் தரங்களுக்கு ஏற்புடையதான மாதச் சம்பள அளவுத் திட்டம் PL 1-2006 ரூபா. 24,250/- 10 x250/- 10 x 270/-10 x 300/- 12 x 330/- 36, 410 ஆகும். ரூபா. 27,020/= ஐ கடந்து செல்வதற்கு II ஆவது தரத்திற்கு தரமுயர்வும், ரூபா. 29,750/= ஐ கடந்து செல்வதற்கு I ஆவது தரத்திற்கு தரமுயர்வும், ரூபா.32,780/- ஐ கடந்து செல்வதற்கு விசேட தரத்திற்கும் தரமுயர்வும் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். அந்த சுற்றறிக்கையில் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலுத்தல்கள் மேற்கொள்ளப்படும்.

5.0 இப் பதவி நிரந்தரமுடையதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். உங்களுக்குரிய ஓய்வூதிய சமப்ள முறை தொடர்பாக அரசாங்கத்தால் எதிர்காலத்தில் மேற்கொள்கின்ற கொள்கையுடனான தீர்மானத்திற்கு இணங்கியொழுகுதல் வேண்டும். மேலும் நீங்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கும்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கும் உதவு தொகை செலுத்தப்படுதல் வேண்டும். அரசாங்கத்தால் அவ்வப்போது விதிக்கப்படும் முறையின்படி அலுவலர்களால் அதற்கு உதவு தொகை செலுத்தப்படுதல் வேண்டும்.

6.0 **முதலாவது நியமனம் பெற்ற சேவை நிலையத்தில் ஆகக்குறைந்தது 03 ஆண்டுகள் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும்.** எவ்வாறாயினும் நியமன அதிகாரியால் தீர்மானிக்கின்ற ஏதேனும் மிகவிசேடமான காரணங்களின்மீது அந்தக் காலம் முடிவடைவதற்கு முன்னர் எவரேனும் அலுவலரை இடமாற்றம் செய்வதற்கு தேவையாயின், நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் உண்டு.

7.0 தகைமைகள்-:அலுவலக பணியாளர் சேவையில் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும்.

(ஆ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ). விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் 18 வயதுக்கு குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க சேவையில் உள்ள நிரந்தர மற்றும் ஓய்வூதியம் உரித்துடையவர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

(இ). நல்லொழுக்கத்துடனும் சிறந்த தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

(ஈ). கல்வித் தகைமைகள்:
கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டு அமா்வுகளுக்கு மேற்படாதவாறு ஆகக் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(உ). அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் அத்தியாயம் v இன் படி அரசாங்க சேவைக்கு நியமனம் பெறுவதற்கு தகைமையற்றவராக இருத்தலாகாது.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்கு ஏற்புடையதான எல்லா தகைமைகளையும் **விண்ணப்பங்கள் கோரப்படும் திகதியில்** அல்லது அதற்கு முன்னராக பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

8.0 விண்ணப்பங்கள் கோருதல்:-
பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படும்.

| அமைச்சு | திணைக்களம் | பிரதேச அலுவலகம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத் துறை இராஜாங்க அமைச்சு | - | - | அலுவலக பணியாளர் சேவையில் தரம் III | 03 |

9.0 கட்டமைப்பு முறையிலான நேர்முகப் பரீட்சை:-
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின் பேரில் விண்ணப்பத்தாரிகளின் அடிப்படை தகைமைகளை பரிசோதிப்பதற்காக நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதியிலயே, நடாத்தப்படும் கட்டமைப்பு முறையிலான நேர்முகப் பரீட்சையில் விண்ணப்பத்தாரிகள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமையின் ஒழுங்கு முறையினை கட்டாயமாக பின்பற்றி, தகைமைகளை பூர்த்தி செய்துள்ள

விண்ணப்பத்தாரிகளை அலுவலக பணியாளர் சேவையில் தரம் iii இற்கு நியமனம் செய்யப்படும். விண்ணப்பத்தாரிகள் நேர்முகப் பரீட்சையில் தோற்றுவதற்கு விருப்பமுள்ள மொழி மூலத்தை தெளிவாக விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டுமென்பதுடன், கட்டமைப்பு முறையிலான நேர்முகப் பரீட்சை அந்த மொழிமூலத்திலயே நடைபெறும்.

கட்டமைப்பு முறையிலான நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் திட்டம் பின்வருமாறு அமையும்.

| அளவுகோல்கள் | | புள்ளிகள் |
|---|---|---|
| பதவிக்கு ஏற்புடையதாக பெற்றுள்ள அனுபவம் (ஆகக்கூடியதாக 05 ஆண்டுகளின் பொருட்டு கவனத்தில் கொள்ளப்படும்) | | 10 |
| தொடர்பாடல் ஆற்றல் | | 05 |
| கல்வித் தகைமைகள் | க.பொ.த.(உயர் தரம் சித்தியடைந்திருத்தல்) | 05 |
| | க.பொ.த. சாதரண தரப் பரீட்சையில் கணிதம், தாய்மொழி, இரண்டாவது அரசகரும மொழி, ஆங்கில மொழி மற்றும் ஏனைய மொழிகளின் பொருட்டு சித்திகளை பெற்றிருத்தல் (ஒரு சித்திக்கு 02 புள்ளிகள் படி ஆகக்கூடியது 5 பாடங்களிற்கு 10 புள்ளிகள் வழங்கப்படும்) | 10 |
| ஆளுமை | | 05 |
| வெளியக செயற்பாடுகள் (விளையாட்டு, சமூக சேவைகள் என்பன) | | 05 |
| நேர்முகப் பரீட்சையில் காட்டும் ஆற்றல் | | 10 |
| மொத்த புள்ளிகள் | | 50 |

குறிப்பு:- பதவிக்கு ஏற்புடையதாக பெற்றுள்ள அனுபவம், கல்வித் தகைமைகள் மற்றும் வெளியக செயற்பாடுகள் தொடர்பாக ஏற்றுக்கொள்ள முடியுமான சான்றிதழ்கள் மூலம் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும். அந்த தகைமைகள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு செல்லுபடியாதல் வேண்டும்.

10.0 விண்ணப்பபடிவத்தை நிரப்பும்போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்கப்படுதல் வேண்டும். தகைமைகளை பரிசீலனை செய்யும்போது எவரேனுமொரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் என அறிய வந்தால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பத்தாரிகளால் சமர்ப்பிக்கப்படும் தகவல் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொய்யானதென அறியவந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

11.1 இத்துடன் இணைக்கப்பட்டுள்ள உரிய மாதிரி படிவத்தினை **மாகாண சபைகள், உள்ளுராட்சி மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சு, இல 330, யூனியன் பிரதேசம், கொழும்பு 02 என்னும் முகவரிக்கு** 19.10.2018 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேலும் மேற்படி அறிவுறுத்தலிற்கு ஒழுங்கமையாத மற்றும் சரியாக பூர்த்தி செய்யாத பூரணமற்ற நிலையில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள்

எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்களை பூர்த்தி செய்யாததன் காரணமாக ஏற்படும் நட்டமானது விண்ணப்பத்தாரியால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

11.2 விண்ணப்பம் வைத்து அனுப்பும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "அலுவலக பணியாளர் சேவையில் தரம் IIIஇன் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" என்று குறிப்பிடுக.

12.0 இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவர்கள் மட்டும் விண்ணப்பம் செய்துள்ளார் என்ற முன் தீர்மானத்திற்கு அமைவாக உரிய திகதியில் அல்லது அன்றைய திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள எல்லா விண்ணப்பத்தாரிகளும், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சில் செயலாளரால் கட்டமைப்பு முறையிலான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். ஆயினும் அவ்வாறு அழைத்தலானது, விண்ணப்பத்தாரி இப்பதவிக்கு தகைமை பெற்றுள்ளார் என்பதனை ஏற்றுக்கொள்ளுதலாக கருதப்படமாட்டாது. விண்ணப்பத்தாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, அறிவித்தலின் பிரகாரம் தகைமைகள் உள்ளதா என பரிசோதிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லையென அறிய வருமாயின் அவர்களது பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படும்.

13.0 பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் கடித ஆவணங்களில் ஒன்றை நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

- I ஆட்பதிவுத் திணைக்களம் மூலம் வழங்கப்படும் செல்லுபடியான தேசிய அடையாள அட்டை.
- II செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு

14.0 இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது தொடர்பான தீர்மானம் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் மேற்கொள்ளப்படும். எல்லா விண்ணப்பத்தாரிகளும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது சட்டதிட்டங்களின்படி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கட்டளைப் படி,
**எஸ்.டி.ஏ.பி. பொரலஸ்ஸ**
இராஜாங்க அமைச்சின் செயலாளர்

2018 ஒக்ரோபர் மாதம் 04 ஆம் திகதி
மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சு,
இலக்கம் 330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02